இணைப்பு I

15ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா] எண் 695க்கான விடையைக் காண்க].

விடை.

வட ஆற்காடு மாவட்டத்தில் உணவு உற்பத்தியை மேலும் அதிகப்படுத்த கீழ்க்கண்ட திட்டங்கள் செயல்படுகின்றன:—

(1) முழுமுர வேளாண்மைப் பகுதித் திட்டம்.—பரிந்துரைக்கப்படும் உயர் விளைச்சல் விதைகள், பசுந்தாள் உரம், இரசாயன உரம், பயிர் பாதுகாப்பு முறைகள் ஆகியவைகளை பயன்படுத்தி ஒரு பகுதியில் (unit) உள்ள உற்பத்தித் திறனை பெருக்குவது இத் திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்திற்கு 1978–79-ஆம் ஆண்டுக்கு ரூ. 6·91 இலட்சம் செலவாகும்.

(2) அமோக விளைச்சல் திட்டம்.—இத்திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் அமோக விளைச்சல் தரும் விதைகளைப் பயன் படுத்தி நெல், சிறு தானியங்கள் உற்பத்தி பன்மடங்கு பெருக்கப்படும். வட ஆற்காடு மாவட்டத்தில் இத்திட்டம் செயல்பட 1978–79-க்கு ரூ. 25,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

(3) பயறுவகை விதைப் பெருக்குத் திட்டம்.—ஆண்டுதோறும் 400 டன்கள் தரமான சான்றிதழ் பெற்ற விதைகளை உற்பத்தி செய்து செங்கல்பட்டு, தென் ஆற்காடு, வட ஆற்காடு மாவட்டங்களில் பயறு விதைத் தேவைகளை நிறைவு செய்வது இத்திட்டத்தின் குறிக்கோள் ஆகும். இத்திட்டமும், மைய அரசின் பயறு மேம்பாட்டுத் திட்டமும் செயல்பட 1978–79 ஆம் ஆண்டுக்கு கீழ்க்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

	இலட்சம்.
(1) ஒருங்கிணைந்த பயறு வகை விதை மற்றும் விதைப் பெருக்குத் திட்டம்.	ரூ. 5.68
(2) மைய அரசின் பயறு மேம்பாட்டுத் திட்டம்.	ரூ. 0.24

மேற்காண் மூன்று திட்டங்கள் மூலம் சென்ற ஆண்டைக் காட்டிலும் இவ்வாண்டு கீழ்க்கண்டவாறு அதிக அளவு உற்பத்தி எதிர்பார்க்கப்படுகிறது :—

(அ) நெல்	0.30 இலட்சம் டன்.
(ஆ) சிறு தானியங்கள் ..	0.07 இலட்சம் டன்.
(இ) பருப்பு வகைகள்	0.11 இலட்சம் டன்.